| தரம் | வலயக் கல்வி அலுவகம் - மூதூர் | | | |
|---|---|---|---|---|
| 8 | இறுதிக் கணிப்பீடு – (2021) 2022 | | | புள்ளி |
| | **இஸ்லாம்** | நேரம்: இரண்டு மணித்தியாலயம் | சுட்டெண் | |

- **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. போலி ஹதீஸ்கள் என்பது
 1. ஸஹீஹ் 2. ஹஸன் 3. ளஈப் 4. மவ்ழுஆத்

02. அல்லாஹ் கூறுகின்றான் என ஆரம்பிக்கும் ஹதீஸ்கள்
 1. ஹதீஸ் கவ்லி 2. ஹதீஸ் குத்ஸி 3. ஹதீஸ் பிஅலி 4. ஹதீஸ் தக்ரீரி

03. ஓதிக்காண்பிக்கப்படாத வஹி என்பதில் அடங்குவது
 1. குர்ஆன் 2. ஸுன்னா 3. இஜ்மா 4. கியாஸ்

04. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பிரபல்யம் அடைந்திருந்த அறிவுத் துறை
 1. தப்ஸீர் 2. ஹதீஸ் 3. வரலாறு 4. மருத்துவம்

05. இஸ்ஹாக் (அலை) அவர்களின் தாய் - தந்தை அடங்கிய விடை தொகுதி
 1. இப்றாஹீம் -- ஹாஜாரா 2. இப்றாஹீம் -- ஸாரா
 3. முஹம்மது (ஸல்) – கதிஜா 4. ஸாரா -- இப்றாஹீம்

06. 'ஸுனன் அர்பஆ' என்பது குறித்து நிற்பது,
 1. நாற்பெரும் கலீபாக்கள்
 2. நான்கு மத்ஹபுகளின் இமாம்கள்
 3. சுவர்க்கத்துக்கு நன்மாராயம் கூறப்பட்டவர்கள்
 4. இமாம்களான அபூதாவூத் திர்மிதி நஸாஈ இப்னு மாஜா ஆகியோரின் கிரந்தங்கள்

07. "பர்ரா" எனும் பெயரால் அழைக்கப்பட்டவர்
 1. ஹதீஜா பின்த் குவைலித் (ரழி 2. ஜுவைரிய்யா (ரழி)
 3. ஹப்ஸா பின்த் உமர் (ரழி) 4.) ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)

08. பின்வருவனவற்றுள் பெண்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
 1. குலபாஉர் ராஷிதூன் 2. அஷரதுல் முபஷ்ஷரீன்
 3. உம்மஹாதுல் மு:.மினீன் 4. அஹ்லுல் பைத்

09. இப்றாஹீம் (அலை) தனது மகன் இஸமாஈல் (அலை) அறுக்கும் விதமாக கனவு கண்டதை உள்ளடக்கும் வஹியின் பிரிவு
 1. உண்மை கனவு 2. சமிஞ்சை 3. அசரீரி 4. இல்ஹாம்

10. நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் வாழ்வுடன் தொடர்புடைய ஒரு கொடியவன்
 1. நும்றூத் 2. காரூன் 3. ஹாமான் 4. பிர்அவ்ன்

11. நபி (ஸல்) அவர்களின் மி:.ராஜ் யாத்திரை ஆரம்பமான இடம்
 1. மஸ்ஜிதுல் ஹராம் 2. மஸ்ஜிதுந் நபவி 3. மஸ்ஜிதுல் குபா 4. மஸ்ஜிதுல் அக்ஸா

12. பிர்அவ்னின் மனைவியன் பெயர்
 1. ஆசியா 2. உம்மு ஸுலைம் 3. ஹாஜரா 4. ஆபிதா

13. தாருல் ஹிஜ்ரா எனப்படும் நகர்
 1. மக்கா 2. மதீனா 3. ஹபஷா 4. ஜித்தா

14. 'அஜ்னபி' எனும் பதம் குறித்து நிற்பது?

1. திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டோர்
2. நெருங்கிய அண்டை வீட்டார்கள்
3. வாரிசுச் செத்துக்கு உரித்தானவர்கள்
4. திருமணம் செய்யத் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டோர்

15. அஜ்னபியத்தான பெண்களுடன் தன்மையில் இருப்பது?
1. ஹலால் 2. ஹராம் 3. மக்ரூஹ் 4. ஜாஇஸ்

16. பொதுச் சொத்துக்கள் பற்றிய சட்டத்திட்டங்கள் இடம் பெற்றிருக்கும் தலைப்பு
1. நஹ்வ் 2. வக்ப் 3. பிக்ஹ் 4. ஹுக்ம்

17. "நீங்கள் நன்மையான விடயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்துக் கொள்ளுங்கள்" என்ற வசனத்தின் மூலம் வெளிப்படுவது
1. மனிதர்கள் சகோதரர்கள் 2. சமயம் அனைத்தும் ஒன்று தான்
3. சமய சுதந்திரம் 4. பொதுப்பணி

18. நபி (ஸல்) அவர்கள் பணியாற்றிய சமூக நிறுவனம்
1. ஹில்புல் புலூல் 2. ஹர்புல் பிஜார்
3. அநாதை இல்லம் 4. தாருந் நத்வா

19. சுற்றாடலை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதும் பூமியில் மரங்களை நட்டிப் பசுமையைப் பேணுவதும்
1. கிலாபத் 2. இமாரத் 3. இபாதத் 4. இராதத்

20 'ஹுகூகுல்லாஹ்' என்பது
1. மனிதன் அல்லாஹ்வின் படைப்புக்கள் அனைத்துக்கும் செலுத்த வேண்டிய கடமை
2. மனிதன் இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமை
3. மனிதன் ஏனைய மதனிர்களுக்கு செய்ய வேண்டிய கடமை
4 மனிதன் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை

**(2X20 = 40 புள்ளிகள்)**

- **சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக**

1. ஸிஹாஹுஸ் ஸித்தா என்பது குதுபுஸ் ஸித்தா என்றும் அழைக்கப்படும் ( )
2. அல்லாஹ்வுடைய கருத்தை தனது மொழி நடையில் கூறுவது ஹதீஸ் குத்ஸி எனப்படும் ( )
3. பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் உணர்வு வராத வரை நாட்டுப்பற்று எம்மிடம் வராது ( )
4. பால் கொடுத்த பெண்ணின் தாய் தற்கால மஹ்ரமியாவாள் ( )
5. "பிர்" என்ற சொல் நன்மை பயக்கும் செயல்களைக் குறிக்கும் ( )
6. ஸஹாபாக்கள் காலத்தில் சமூகப்பணிகள் நடைபெறவில்லை ( )
7. ஒருவர் தனது மனைவியுடன் அவளது சகோதரியையும் திருமணம் செய்துக்கொள்வது தவாறாகும்( )
8. அல் இஸ்ரா எனப்பவடுது இராவழிப் பயணமாகும் ( )
9. நபிகளாரின் யத்ரிப் பிரவேசத்தோடு அந்நகர் மக்கா முகர்ரமா எனப்பட்டது ( )
10. ஸபிய்யா (ரழி) மதீனாவில் வாழ்ந்த யூதர்களின் பனூநளீர் கோத்திரத்தை சேர்ந்தவர். ( )

**(1X10 = 10 புள்ளிகள்)**

- **<u>பொருத்தமான சொல்லைக் கெண்டு இடைவெளி நிரப்புக</u>**

1. மனிதர்கள் மத்தியில் ஆண் பெண் தொடர்பாடல் ............................ இருக்க வேண்டும்.

2. அல்குர்ஆன் மனனமிடப்பட்டுள்ளது போல .......................... மனனமிடப்படவில்லை.

3. ஏழைகள், விதவைகள் .................... நேசக்கரம் நீட்டுதல் சமூக சேவைகளில் அடங்கும்.

4. .................... மூன்று வகைப்படுவர்.

5. மனைவியின் தந்தையின் சகோதரி ................................... உள்ளடங்குவார்.

6. ............................ வேறுபாடுகளை மறந்து பொதுப்பணிகளில் ஈடுபட வேண்டும்.

7. அபூபக்ர் (ரழி) அவர்கள் .................... எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்கள்.

8. இப்றாஹீம் (அலை) அவர்களின் ............................ எம் வாழ்விலும் பின்பற்றி ஒழுகுவோம்.

9. மி∴ராஜ் நிகழ்வு நபி (ஸல்) அவர்களின் ................................... ஒன்றாகும்.

10. ஸூறா மாஊன் 107 ஆவது ................................ ஆகும்.

**( அநாதைகள், அத்தியாயம், திருமண உறவில், ஆரோக்கியமாக, ஹதீஸ் குத்ஸி, முன்மாதிரிகள், ஸித்தீக், அற்புதங்களில், இனமத, அயலர்கள்)**

**(1X10 =10 புள்ளிகள்)**

- **எல்லா வினாக்களுக்கும் விடைத் தருக**

***1.*** *1.* பொதுச் சொத்து என்றால் என்ன?

.................................................................................................................

.................................................................................................................

2. எமது பகுதியில் காணப்படும் பொதுச் சொத்துக்கள் ஆறினைக் குறிப்பிடுக?

.................................................................................................................

.................................................................................................................

3. பொதுச் சொத்தை பேணுவது தொடர்பான சம்பவமொன்றைக் குறிப்பிடுக?

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

.................................................................................................................

**(2+3+5= 10 புள்ளிகள்)**

***2.*** *1.* உம்மஹாதுல் மு∴மினீன்கள் எனப்படுவோர் யாவர் ?

.................................................................................................................

.................................................................................................................

2. ஸவ்தா (ரழி) அவர்களின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?

.................................................................................................................

.................................................................................................................

3. அன்னை ஜுவைரிய்யா (ரழி) அவர்களைப் பற்றி சுருக்காக விளக்குக?

.................................................................................................................

**(2+3+5= 10 புள்ளிகள்)**

***3.*** *1.* முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்ற நால்வரை பெயரிடுக?

2. நபி (ஸல்) அவர்களின் பகிரங்கப் பிரச்சாரத்தை சுருக்கமாக குறிப்பிடுக?

3. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி வந்த சந்தர்ப்பத்தினை குறிப்பிடுக?

Education கல்வி අධ්‍යාපන

**(2+3+5= 10 புள்ளிகள்)**

***4.*** *1.* அஜ்னபி என்றால் என்ன?

2. பால்குடி உறவு முறையினர் மூவரைக் குறிப்பிடுக?

3. சமூக சேவைகள் ஐந்தினைக் குறிப்பிடுக?

**(2+3+5= 10 புள்ளிகள்)**

## இறுதிக் கணிப்பீடு – (2021) 2022
## தரம் - 08
## இஸ்லாம்

- **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 - 4 | 2 - 2 | 3 - 2 | 4 - 2 | 5 - 4 | 6 - 4 | 7 - 2 | 8 - 3 | 9 - 1 | 10 - 1 |
| 11 - 1 | 12 - 1 | 13 - 2 | 14 - 1 | 15 - 2 | 16 - 2 | 17 - 4 | 18 - 1 | 19 - 2 | 20 - 3 |

- **சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ( ✓ ) | 2 ( ✓ ) | 3 ( ✓ ) | 4 ( X ) | 5 ( ✓ ) |
| 6 ( X ) | 7 (✓ ) | 8 ( ✓ ) | 9 ( X ) | 10 ( X ) |

- **பொருத்தமான சொல்லைக் கெண்டு இடைவெளி நிரப்புக**

1. **ஆரோக்கியமாக** 2. **ஹதீஸ் குத்ஸி** 3. **அநாதைகள்** 4. **அயர்கள்** 5. **திருமண உறவில்**
6. **இனமத** 7. **ஸித்தீக்** 8. **முன்மாதிரிகள்** **9. அற்புதம்** **10. அத்தியாயம்**

**1. 1.** தனிமனிதர்களால் அல்லது குழுக்களால் ஏனையவர்கள் பயன் பெறுவதற்கு வக்பு செய்யபட்டவை

**2.** பாடசாலை பொது கிணறு பஸ் தரிப்பிடம் வைத்தியசாலை பூங்கா மையவாடிகள்

**3.** பொருத்தமான சம்பவம் எழுதப்பட்டிருப்பின் அபூபக்கரின் மனைவி தயாரித்த உணவு2

**2.** 1. 1. நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள்

2. தோற்றத்தில் உயரமானவர் பண்பாக பழகுவார வணக்க ழிபாடுகளில் தீவீரம் அன்பானர்

3. 1. இவர் பனூ முஸ்தலக் கோத்திர தலைவரின் மகள் இவர் கைதியாக பிடிபட்டு நபியிடம் நஸ்ஈடு கேட்டுச் சென்று பின்னர் நபியின் மனைவியாக உயர்வடைந்தார்

**3.** 1. அபூபக்கர் அலி கதீஜா ஸைத் உஸ்மான் (ரழி) அன்ஹும்

2. (74 : 12) வசனம் இறங்கிய போது நபி (ஸல்) அவர்கள் ஸபா மலையில் ஏறி மக்களை அழைத்தார்கள்

3. ஜஹிலிய்யாக்கால மக்களின் மோசமான நிலை காரணமாக ஹிறாக் குகையில் தியானிப்பார்கள் அச்சந்தர்ப்பத்தி ஜிப்ரீல் (அலை) வந்து அல்குர்ஆனை ஓதிக்காட்டியமை

**4**. 1. திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டவர்கள்

2. பால் கொடுத்த தாய் பால் குடி உறவிலான மகள் தாய் பால் குடி உறவிலான சகோதரி

3. 1. பசித்தோருக்க உணளித்தல் 2. நீர் வசதி செய்து கொடுத்தல்

3. நோய்வாய்பட்டோருக்கு உதவுதல் 4. ஏழைகள் அநாதைகளுக்கு நேச கரம் நீட்டுதல்

5. அநியாயம் இழைக்கப்பட்டோருக்கு உதவுதல்

ONLINE CLASSES - 2025

# May NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**